# வாண்டுகள் பயணம்



## அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்

**வான்முகில்**

திருநெல்வேலி

# வாண்டுகள் பயணம்

## (Children Manual for Community Engagement)



### அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம்

Constitutional Rights Education Club for Children (CRE Club)

வான்முகில்

திருநெல்வேலி

# அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை

## (Preamble to The Constitution of India)



## உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம்... | 4 |
| 2. | நலவாழ்வும் பாதுகாப்பும் | 13 |
| 3. | அனைவர்க்கும் கல்வி | 22 |
| 4. | சுத்தமும் சுகாதாரமும் | 30 |
| 5. | பாலின சமத்துவமும் பங்கேற்பும் | 37 |
| 6. | உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும் | 46 |
| 7. | மக்கள் நலத் திட்டங்கள் | 56 |
| 8. | நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஓர் அறிமுகம் | |

# வாண்டுகள் பயணம்-1

# நம்ம ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம்...

# 1. நம்ம ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம்



**நோக்கங்கள்**

1. நமது ஊரில் உள்ள அனைத்து வளங்கள் குறித்தும் தெரிந்து கொள்ளல்.
2. நமது ஊரில் வசிக்கும் பல்வேறு தரப்பட்ட மக்களது வாழ்வியல் சூழலைப் புரிந்து கொள்ளல்.
3. நமது ஊரைச் சுற்றிப்பார்த்த பின், சேகரித்த தகவல்கள் மற்றும் உற்றுக் கவனித்ததன் அடிப்படையில் புதிய கோணத்தில் நம் வசிப்பிடத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளல்.

## 1. அறிமுகம்

**குழந்தைகளே!**

நாம பல ஊர்களுக்கு ஏற்கெனவே சுற்றுலா சென்றிருப்போம். இவ்வூர்களில் பல இடங்களைப் பார்த்து மகிழ்ந்திருப்போம். இப்பவும் நாம சுற்றுலா செல்லப் போகிறோம். ஆனால் இச்சுற்றுலாவில் நம்ம கிராமத்தை – நாம் வசிக்கும் பகுதியைத் தான் பார்க்கப் போறோம்!

## 2. என்னது சுற்றுலாவா?

ஆமா, நம்ம ஊரை இதுவரை நாம் பார்க்காத கோணத்தில் பார்க்கப் போகிறோம். நாம் வசிக்கும் பகுதியின் அமைவிடம், வாழும் மக்கள், அவர்களின் பண்பாட்டு முறைகள், வசதி வாய்ப்புகள் போன்ற பல தகவல்களைச் சேகரித்து, அவற்றை விவாதித்து அறிந்து கொள்ளப் போகிறோம். நம் பயணத்தைத் தொடங்கும் முன் கீழ்க்கண்ட முன் தயாரிப்புகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றைக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போமா?

## 3. சுற்றுலாவுக்கான தயாரிப்புகள்

1) முதலில் நாம் வசிக்கும் பகுதியின் அமைவிடத்தை அறிந்து கொள்ள, அதன் வரைபடத்தைத் தயார் செய்ய வேண்டும். ஊரின் மையப் பகுதிக்குச் சென்று திசைகளை வைத்து துல்லியமாக அதன் வரைபடத்தை வரைவது சரியாக இருக்கும். வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு திசைகளையும் குறித்துக் கொள்வது நல்லது. ஊரில் / பகுதியில் உள்ள அனைத்துத் தெருக்களையும் குடியிருப்புகளையும் வரைந்து கொள்வது அவசியம்.
2) நம்ம ஊரில் உள்ள அனைத்து முக்கிய இடங்களையும், அரசு அலுவலங்களையும் தனித்தனிக் குறியீடுகளாக வரைபடத்தில் உரிய இடத்தில் குறிப்பது நமது புரிதலுக்கு ஏதுவாக அமையும்.
3) நம்ம ஊரில் உள்ள இயற்கை வளங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல் இந்த சுற்றுலாவின் ஒரு பகுதியாக அமையும். குறிப்பாக நம்ம ஊருக்கு வளம் சேர்க்கும் ஆறு, ஏரி, குளம், ஓடை, கால்வாய், கண்மாய், ஊரணி போன்றவற்றின் இன்றைய நிலை குறித்த தகவல்களைத் திரட்டுவது நன்றாக இருக்கும்.
4) நம்ம ஊரின் பசுமைச் சூழலை வரைபடத்தில் குறிப்பது சுற்றுலாவில் முக்கியமான ஓர் அங்கம். நம்ம ஊரில் எத்தனை மரங்கள் உள்ளன, அவை எவ்வகையானவை என்று குறிப்பிடவும்.
5) நம்ம ஊர் மக்கள் தொகையில் பெண்கள், ஆண்கள், திருநர்கள், 60 வயதிற்கு மேற்பட்டடோர், 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள், 15 - 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பருவத்தினர், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர் மற்றும் கைம்பெண்கள் குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்வது அவசியம்.
6) நம்ம ஊரில் அனைவரும் ஒன்று கூடும் பொது இடங்கள் உள்ளனவா என்பதை அறிந்து, அவற்றை வரைபடத்தில் குறிப்பிடவும். பொது இடங்கள் அனைவரும் பயன்படுத்தும் வகையில் உள்ளனவா? அல்லது ஒரு சிலர் மட்டுமே பயன்படுத்தும் வகையில் உள்ளனவா?
7) நம்ம ஊரில் நம் தாய்மொழியாம் தமிழ் பேசும் மக்களைத் தவிர, வேறு மொழி பேசும் மக்கள் இருக்கிறார்களா?

## 4. வாங்க நம்ம ஊரைச் சுற்றிப் பார்ப்போம்...

### படிநிலை - 01 - குழுவாகப் பிரிதல்

1. இந்தச் சுற்றுலா ஏதோ வாகனத்தில் சென்று சுற்றிப் பார்ப்பது அல்ல, மாறாக நடந்தே சென்று நம்ம ஊரை மாறுபட்ட கோணத்தில் ஆய்ந்து அறிவதாகும்.

2. சுற்றுலா செல்லும் நாளையும் நேரத்தையும் மன்றக் குழந்தைகள் அனைவரும் இணைந்து முடிவு செய்திட வேண்டும். காலை முதல் மதிய உணவு வரையிலான நேரத்தைச் சுற்றுலா செல்லும் நேரமாகப் பயன்படுத்தலாம்.
3. சுற்றுலா புறப்படும் முன்பு, குழந்தைகள் கவனமாகக் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகளை நெறியாளர் தெளிவாக எடுத்துக் கூறுவது அவசியம்.
4. சுற்றுலா புறப்படும் போது, குழந்தைகளின் வருகையை முறையாகப் பதிவு செய்ய வேண்டும்.
5. குழந்தைகள் 5 பேர் கொண்ட சிறு குழுக்களாகப் பிரிய வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒருங்கிணைப்பாளர் ஒருவரை குழந்தைகளே தேர்வு செய்தல் நன்று.
6. சுற்றுலாக் குழுவில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமையும், குழு ஒருங்கிணைப்பாளர் பொறுப்பில் சமஉரிமையும் வழங்குதல் அவசியம்.
7. குழந்தைகள் அனைவரும் தங்களுக்கான எழுது பொருட்களை கொண்டு வரவும்.

## படிநிலை - 02 - கிராமத்தின் வரைபடத்தை வரைதல் (செயல் ஒன்று)

முக்கிய சாலைகள், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், நூலகம், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தங்கள், கடைகள், சமுதாயக் கூடம், சந்தைகள், குடிநீர்த் தொட்டி, குளங்கள், ஏரிகள், பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்கள், விளையாட்டுத் திடல்கள், குடியிருப்புகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், காவல் நிலையம் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களையும் கவனமாக வரைய வேண்டும். மேற்கண்ட ஒவ்வொன்றுக்கான குறியீடுகளை வரைபடத்தில் உரிய இடத்தில் குறிப்பது நமது புரிதலுக்கு ஏதுவாக அமையும். நாம வசிக்கும் பகுதி என்பது அனைத்து சமூக மக்களையும் உள்ளடக்கியதாகும். இதனைக் கவனத்தில் கொண்டு, மாதிரி வரைபடத்தை முழுமையாக உருவாக்குதல் அவசியம்.

## படிநிலை – 03 - மக்களின் வாழ்நிலையை களப்பணி வாயிலாக அறிதல் (செயல் இரண்டு)

1) நம்ம ஊரில் வாழும் மூத்த குடிமக்கள், ஆசிரியர்கள், முன்னாள், இன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர்களைச் சந்தித்து நமது ஊரின் தற்போதைய நிலையைக் கேட்டு அறிந்து கொள்வது அவசியம்.
2) நம்ம ஊரின் வரலாற்றுச் சிறப்புகளைத் தெரிந்து கொள்ளவும்.

3) நமது ஊரில் அரசுப் பணியில் பணியாற்றுவோர், தனியார் துறையில் வேலை செய்வோர், சொந்தமாகத் தொழில் செய்வோர், விவசாயம், மீன்பிடித் தொழில் உள்ளிட்ட பிற தொழில் செய்வோர் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது நல்லது.

4) நம்ம ஊரில் பெண்களும், ஆண்களும் பொதுவாக எவ்வகையான வேலைகளுக்குச் செல்கின்றனர்? சராசரியாக ஒரு நபருக்கு ஒரு நாள் ஊதியம் எவ்வளவு? ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் வழங்கப்படுகிறதா? மாதம் எத்தனை நாள் வேலை கிடைக்கும்?

5) நம்ம ஊரில் இளைஞர், இளம் பெண்களில் வேலைவாய்ப்பற்றோர் எத்தனை பேர்?

6) நம்ம ஊரில் பள்ளிக்குச் செல்லாமல் குழந்தைகள் யாரேனும் வேலைக்குச் செல்கின்றனரா? ஆம் எனில், எத்தனை பேர்?

7) நம்ம ஊரில் கொத்தடிமை தொழிலாளர்களாக எவரேனும் உள்ளனரா? ஆம் எனில், எத்தனை பேர்? அவர்கள் எவ்வகையான தொழிலில் ஈடுபடுகிறார்கள்?

8) நம்ம ஊரில் கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதா? ஆம் எனில், எத்தனை பேர்? எந்த மாதிரியான வேலைகளுக்குச் செல்கின்றனர்?

9) நம்ம ஊரில் கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் குழந்தைத் திருமணம் நடந்துள்ளதா? ஆம் எனில், எத்தனை?

10) நம்ம ஊருக்கு போதிய எண்ணிக்கையில் பேருந்து வசதிகள் உள்ளதா? போக்குவரத்தில் உள்ள பிரச்சனைகள் என்ன?

11) நம்ம ஊரில் செயல்படும் சமூக இயக்கங்கள், இளைஞர் மன்றங்கள், சேவை அமைப்புகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பற்றிய விவரங்களையும் அறிந்து கொள்வது நல்லது.

12) நம்ம ஊரில் மக்கள் பின்பற்றும் சமயங்கள், வழிபடும் குலதெய்வங்கள், சமயம் - பண்பாடு சார்ந்த நம்பிக்கைகள், கடைப்பிடிக்கும் சடங்குகள், கொண்டாடப்படும் விழாக்கள் போன்றவற்றை தெரிந்து கொண்டு, இந்நிகழ்ச்சிகளில் வெளிப்படும் சிறப்பு பண்புகளை அறிந்து கொள்வது அவசியம்.

13) ஊரில் உள்ள பெரியவர்கள் சொல்லும் கதைகள், பழமொழிகள் போன்றவற்றை அறிந்து கொள்ளவும்.

14) நம்ம பகுதியில் அடிக்கடி பயன்படுத்தப்படும் வசைச் சொற்கள், ஏளனச் சொற்கள் யாவை? அவற்றை யாருக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர்?

மேற்கண்ட தகவல் திரட்டல் பணியில் ஒவ்வொரு குழுவும் தங்களுக்கு எவையெல்லாம் சாத்தியமோ அந்தத் தகவல்களை திரட்டவும்.

## படிநிலை - 04 - திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்டு விவாதித்தல்

நம்ம ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டோம். நாம் பார்த்த, தெரிந்து கொண்ட, திரட்டிய தகவல்கள் அனைத்தையும் பகிர்ந்து கொள்ளுவோமா? நம் ஊரின் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் நம் ஊரைப்பற்றி கலந்து உரையாடுவதும், விவாதிப்பதும் எவ்வளவு அருமையான ஒன்று. வாங்க, நாம எல்லாரும் நம்ம பார்வையிலேயே நம்ம ஊரைப் பற்றி அறிந்து கொள்வோம். குழு விவாதத்தில் பின்பற்ற வேண்டியவை.

1) சுற்றுலாவில் பங்கேற்ற அனைத்து மன்றக் குழந்தைகளும் தங்கள் கருத்துக்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான சூழல் அமைக்கப்பட வேண்டும்.
2) விவாதங்கள் ஆரோக்கியமானதாகவும் பிறர் கருத்தை மதிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
3) நெறியாளர் விவாதத்தை நெறிப்படுத்த வேண்டும்.

## படிநிலை 05 – கட்டுரை, ஓவியம் வரைதல் (செயல் மூன்று)

**"எனது ஊரின் நிலை"** என்ற தலைப்பில் ஒவ்வொருவரும் ஒரு கட்டுரையை எழுதி அல்லது ஓவியம் வரைந்து, அடுத்த நமது மன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்கலாமா?

(பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளையும் பாராட்டி சுற்றுலாவை நெறியாளர் நிறைவு செய்யலாம்.)

### சிந்தனைக்கான கேள்விகள்

1) நம்ம ஊரில் வசிக்கும் அனைத்து மக்களும் ஒற்றுமையாக இருக்கிறார்களா? அனைத்து சாதி, சமய மக்களும் ஒன்றாக நம்ம ஊருக்குள் வசிக்கிறார்களா? அல்லது ஊருக்குள்ளேயே தனித்தனி குடியிருப்புகளில் / பகுதிகளில் வசிக்கிறார்களா?
2) நம்ம ஊரில் மக்கள் அனைவரும் தங்களுக்குள் பாகுபாடின்றி பழகுகின்றனரா? அதில் சமத்துவ உணர்வு உள்ளதா? அவ்வாறு இல்லை எனில், பாகுபடுத்தும் செயல்கள் அல்லது சொற்கள் எவை? அவ்வாறு புண்படுத்தும் சொற்கள் வழக்கில் உள்ளனவா?
3) நம்ம ஊரில் மக்கள் அனைவரும் கொண்டாடும் திருவிழாக்கள், பண்டிகைகள் எவை? திருவிழாக்கள் எவ்வகையில் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளன? இத்திருவிழாக்களில் நம்ம ஊரில் உள்ள அனைத்து மக்களும் கலந்து கொள்கின்றனரா?

## எதிர்பார்க்கும் விளைவுகள்

1. ஊரில் உள்ள அனைத்து வளங்கள் குறித்த புரிதல் குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும்.
2. ஊரில் வசிக்கும் அனைத்து மக்களது வாழ்வியல் சூழலையும் குழந்தைகள் புரிந்து கொண்டிருப்பர்.
3. குழந்தைகள் தங்கள் ஊரை புதிய கோணத்தில் பார்த்திருப்பர்.
4. குழந்தைகளின் ஆய்வுத் திறன், படைப்பாற்றல் திறன் வெளிப்பட்டிருக்கும்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

**இலக்கு - 8 அனைவர்க்கும் கண்ணியமான வேலைவாய்ப்பையும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியையும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.**

**இலக்கு - 11 அனைவர்க்கும் பாதுகாப்பான குடியிருப்புகளும், நகரங்களும் உருவாக்கப்பட வேண்டும்.**

### உங்களுக்குத் தெரியுமா?

சமயம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் இந்தியக் குடிமகன் எவரையும் கட்டுப்படுத்துவதோ, ஒதுக்குவதோ அல்லது நிபந்தனைக்கு உட்படுத்துவதோ கூடாது.

- பிரிவ 15 (2), இந்திய அரசமைப்புச் சட்டம்

# வாண்டுகள் பயணம் - 2

# நலவாழ்வும் பாதுகாப்பும்

# 2. நலவாழ்வும் பாதுகாப்பும்

**நோக்கங்கள்**

1. குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமையை புரிந்து கொள்ளுதல்.
2. குழந்தைகள் உடல்நலம், நலவாழ்வு தொடர்பான புரிதலை ஏற்படுத்துதல்.
3. குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான அமைப்புகளை தெரிந்து கொள்ளல்.

## 1. அறிமுகம்

குழந்தைகளே! முந்தைய பாடத்தில் நம் ஊரில் உள்ள அனைத்து வளங்கள், வசிக்கும் மக்கள் மற்றும் குடியிருப்புகள் குறித்த தகவல்களைத் திரட்டி, நம்ம ஊர் வரைபடத்தை ஒன்று சேர்ந்து வரைந்தோம். நாம மேற்கொண்ட சுற்றுலாவில் நேரில் பார்த்ததையும் கேட்டதையும் வைத்து, நம்மில் சிலர் **"எனது ஊரின் நிலை"** என்ற தலைப்பில் கட்டுரையோ, ஓவியமோ வரைந்து மகிழ்ந்தோம். நாம் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் புதிய கோணத்தில் நமது ஊரைப்பற்றி பலவற்றை தெரிந்து கொண்டோம். இதன் அடிப்படையில் மேற்கொண்ட விவாதங்களும் நமக்கு பயனுள்ள வகையில் அமைந்தன. இப்போது குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு குறித்து இப்பாடத்தில் தெரிந்து கொள்ளப் போகிறோம். கள அனுபவமாக மாறப்போகும் இப்பாடம் ஒருவகையில் இன்னொரு சுற்றுலா தானே!!! கடந்த சுற்றுலா அனுபவம் இந்தக் கள அனுபவத்திற்கு நல்ல அடிப்படையாக அமைந்திருக்கும். வாருங்கள் புறப்படுவோம்!

> நம் உயிர் வாழும் உரிமையை இந்திய அரசமைப்புச் சட்டமும், அகில உலக மனித உரிமைச் சட்டங்களும், அடிப்படை உரிமையாக அங்கீகரித்துள்ளன. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளில் முக்கியமான உரிமைகள்: சத்தான உணவு, சுத்தமான குடிநீர், வசிப்பதற்கு இருப்பிடம், தூய்மையான காற்று, சுற்றுச்சூழல், தரமான இலவசக் கல்வி, சுகாதாரம் போன்றவை.

## 2. கள அனுபவத்திற்குச் செல்லும் போது கவனிக்க வேண்டியவை

ஆபத்தான கிணறுகள், மூடப்படாத ஆழ்குழாய் கிணறுகள், குளங்கள், ஓடைகள், நெரிசலான போக்குவரத்து உள்ள சாலைகள், குண்டும் குழியுமாக உள்ள தெருக்கள், சாக்கடை நீர் தேங்கியுள்ள

பகுதிகள், பராமரிப்பு பணிகளுக்காக தோண்டப்பட்டு முறையாக சரி செய்யப்படாத சாலை ஓரங்கள் / இடங்கள், அறுந்து கிடக்கும் மின் கம்பிகள், முட்புதர்கள், இடிந்து போகும் நிலையில் உள்ள பாழடைந்த கட்டிடங்கள், மழை நீர் தேங்கி நிற்கும் குழிகள், மதுக்கடைகள், சுடுகாடு, மயானம் போன்ற இடங்களில் நாம் பாதுகாப்பாகவும் முன்னெச்சரிக்கையோடும் நடக்க வேண்டும். மேலும் நாம் செல்லும் தெருக்களில் வெறி நாய்கள் போன்ற அச்சுறுத்துதல்கள் இருப்பின், மிகக் கவனமாக இருப்பது அவசியம்.

## 3. கள அனுபவத்திற்கான தயாரிப்புகள்

1. கள அனுபவத்திற்கான தகவல்களை உள்ளாட்சி அமைப்புகளிடம் கேட்டுப் பெறலாம். அவர்களின் முழுமையான ஒத்துழைப்பையும் நாடலாம்.
2. நம்ம ஊரில் உள்ள விவரம் அறிந்த இளைஞர்கள், பெரியவர்கள், சமுதாயத் தலைவர்கள் ஆகியோரிடம் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து ஆலோசிக்கலாம்.
3. உள்ளூரில் பணியாற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள், கிராம செவிலியர்கள், சுகாதாரத்துறை பணியாளர்கள் போன்றோரிடம் குழந்தைகளின் நலவாழ்வு குறித்த தகவல்களைப் பெறலாம். (குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள், அவை எப்படி ஏற்படுகின்றன, அவற்றின் பாதிப்புகள் குறித்த தகவல்கள்)
4. சுகாதாரம் குறித்து தெளிவு பெற்ற பின்பு, நமது பகுதியில் 0 – 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள், 15 - 18 வயதுக்குட்பட்ட வளரிளம் பருவத்தினர் எத்தனை பேர் இருப்பர் என்று தெரிந்து கொள்ளலாம்.

மேற்கண்டவற்றை மன்ற நெறியாளர் முறையாக ஒருங்கிணைக்க வேண்டும்.

## 4. பயணத்தில் நாம் என்ன காணப் போகிறோம்?

1. குழந்தைகள் நலமோடு வாழ அடிப்படையான தேவைகள் குறித்து குறிப்பாக நல்ல உணவுப் பழக்கங்கள், உடல்நலம் பேணத் தேவைப்படும் உடற்பயிற்சிகள் குறித்து விளக்கமாக தெரிந்து கொள்வது.
2. குழந்தைகளுக்கு பொதுவாக வரும் நோய்கள் எவை?
3. மாற்றுத்திறனாளி குழந்தைகள் சந்திக்கும் பிரச்சனைகள் என்ன?
4. பள்ளியில் அனைத்துக் குழந்தைகளும் மதிய உணவு உண்கின்றனரா?

5. இப்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்குகிறதா? ஆம் எனில், தங்கள் பகுதியில் இருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது எனத் தெரிந்து கொள்ளல்.
6. கடந்த 12 மாதங்களில் உங்கள் ஊரில் மகப்பேறு மரணங்கள் நிகழ்ந்துள்ளதா?
7. பிறந்த குழந்தை முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறந்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதா?
8. பள்ளியில் அனைத்துக் குழந்தைகளும் விளையாட போதுமான விளையாட்டுத் திடல் உள்ளதா?
9. நம் ஊரில் கிராம குழந்தைகள் பாதுகாப்புக் குழு செயல்படுகிறதா? ஆம் எனில், அக்குழு உறுப்பினர்களோடு உரையாடுதல்.
10. தமிழக அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு செய்யப்பட்டுள்ளதா? ஆம் எனில், அக்குழு உறுப்பினர்களோடு உரையாடுதல்.

## 5. கள அனுபவத்தின் போது செய்ய வேண்டியவை

### நெறியாளர் கவனத்தில் கொள்ள வேண்டியவை

**படிநிலை - 01 - குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்**

1. குழந்தைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கும் போது ஆண், பெண் குழந்தைகள் அக்குழுக்களில் சமமாக இடம்பெற்றிருப்பது அவசியம்.
2. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு பொறுப்பாளரை தேர்வு செய்ய வேண்டும். இதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது அவசியம்.

**படிநிலை - 02 - ஊரின் மையப் பகுதிக்குச் செல்லுதல்**

மன்றக் குழந்தைகள் அனைவரும் ஊரின் மையப் பகுதிக்குச் செல்ல வேண்டும். ஊரில் மொத்தம் எத்தனை தெருக்கள் உள்ளன என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ப குழுக்களுக்குத் தெருக்களை ஒதுக்க வேண்டும். ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மன்றக் குழந்தைகள் செய்யவேண்டியவை**

**படிநிலை – 01 – களப்பணியைத் தொடங்குதல்**

1. குழந்தைகள் ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களைச் சந்திப்பர்.
2. வீடுகளில் மக்களைச் சந்திக்கும் போது, தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ளவது அவசியம். குறிப்பாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூற வேண்டும்.
3. “பயணத்தில் நாம் என்ன காணப்போகிறோம்” என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட 10 கேள்விகளுக்கான பதில்களை தகவல்களாகத் திரட்ட வேண்டும்.

**படிநிலை – 02 - தகவல்களைத் தொகுத்து அறிக்கைத் தயார் செய்தல்**

1. கள அனுபவத்தில் கிடைத்த தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து விவாதிக்க வேண்டும். பின்னர் அவற்றை பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கவும்.
2. “பயணத்தில் நாம் என்ன காணப்போகிறோம்” என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட 10 கேள்விகளையே பல்வேறு தலைப்புகளாக எடுத்து வகைப்படுத்தலாம்.

**எதிர்பார்க்கும் விளைவுகள்**

1. குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமை பற்றி குழந்தைகள் அறிந்து கொள்வர்.
2. இக்கள அனுபவம் குழந்தைகளுக்கு கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும்.
3. குழந்தைகளிடம் குழுவாகச் செயற்படும் உணர்வு உருவாகும்; களப்பணி மேற்கொள்ளும் ஆர்வமும் வளரும்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு

## இலக்கு-03 உடல்நலம், நலவாழ்வை உறுதிச் செய்தல்

# வாண்டுகள் பயணம்-3

# அனைவர்க்கும் கல்வி

# 3. அனைவர்க்கும் கல்வி

## நோக்கங்கள்

1) நமது ஊரின் கல்விச் சூழல் குறித்தும் குழந்தைகளின் இன்றைய கல்வி நிலை குறித்தும் தெரிந்து கொள்ளல்.
2) கல்வி அனைவருக்குமான ஓர் அடிப்படை உரிமை என்று அறிந்து கொள்ளல்.
3) குழந்தைத் தொழிலாளர் இல்லா பகுதியாக நமது ஊரை மாற்றுவதற்கு அனைவரும் சேர்ந்து கனவு காணுதல்.

## அறிமுகம்

குழந்தைகளின் நலவாழ்வும் பாதுகாப்பும் பற்றி நமது ஊரில் நாம் மேற்கொண்ட கள அனுபவத்தின் வாயிலாக கிடைத்த தகவல்களைக் கொண்டு முந்தைய பாடத்தில் விரிவாக விவாதித்தோம். இது குறித்து நமக்கு இப்போது கூடுதல் தெளிவு கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில், இந்தப் பாடத்தில் நமக்கான கல்வி உரிமை என்பது குறித்து சற்று பேசுவோமா? குழந்தைகளையும் கல்வியையும் எப்போதும் பிரிக்கவே முடியாது. குழந்தைகள் என்று சொன்னாலே கல்வியோடும் பள்ளிச் சூழலோடும் தொடர்புபடுத்தாமல் இருக்க முடியாது.

அதனால் தான் கல்வி என்பது வாழ்வுரிமையின் ஓர் அங்கமாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி, குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளில் இருந்து நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் குழந்தைகளின் கல்வி, சுகாதார நிலை ஆகியன பற்றி அறிந்து கொள்ளவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஏதுவாக அமைகிறது.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** (குறள் - 400)

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## கள அனுபவம்: நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை

நமக்கு இது இரண்டாவது கள அனுபவம். மேலே குறிப்பிட்டபடி, நமது ஊரில் கல்வி நிலை குறித்து நாம் இங்கு சில தகவல்களைத் திரட்டி, கல்வி நம் அனைவருக்குமான அடிப்படை உரிமை என்ற கண்ணோட்டத்தில் இவற்றை விவாதிக்கப்போகிறோம். கள அனுபவத்தில் நம்ம ஊரில் நாம் சேகரிக்கப்போகும் அடிப்படைத் தகவல்கள் பின்வருமாறு;

1. பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண், வகுப்பு வாரியாக.
2. பள்ளி செல்லா குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண், வயது வாரியாக.
3. இடை நின்றலுக்கான காரணங்களைக் கண்டறிக.
4. அரசுப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண், வயது வாரியாக.
5. தனியார் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை - ஆண், பெண், வயது வாரியாக.
6. குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளனவா? (18 வயதிற்குட்பட்டவர்கள்)
7. குழந்தைத் தொழிலாளர்கள் யாரேனும் உள்ளனரா? (15 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளரிளம் பெண்கள் ஆபத்தான தொழில்கள் எதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா?)
8. பெண் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்கின்றனரா? இல்லையெனில் காரணங்களை அறிக.
9. மன்றக் குழந்தைகள் ஒவ்வொருவரின் தனித் திறமைகளைப் பட்டியல் இடுக.
10. குழந்தைத் தொழிலாளர் இல்லா பகுதியாக நம்ம ஊரை மாற்றுவதற்கு மன்றக் குழந்தைகள் அனைவரும் சேர்ந்து திட்டமிடுதல், கனவு காணுதல்.

மன்றத்தின் நெறியாளர் மேற்கண்ட செயல்பாடுகளில் வாய்ப்புள்ளவற்றை தேர்வு செய்து அவற்றை குழந்தைகளை ஈடுபடுத்தி செயல்படுத்த வழிகாட்டவும்.

## நடைமுறைப்படுத்தும் முறை

**செயல்பாடு-01**

**படிநிலை-01-மாணவர்களைக் குழுவாகப் பிரித்தல்**

1. மாணவர்களை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிப்பது அவசியம். அவ்வாறு பிரிக்கும் போது ஆண் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை சமமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.
2. ஒவ்வொரு குழுவில் உள்ள குழந்தைகளில் இருந்தும் ஒரு பொறுப்பாளரை தேர்வு செய்வது அவசியம். தேர்வு செய்வதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

**படிநிலை-02-கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்லுதல்**

அனைவரும் கிராமத்தின் மையப் பகுதிக்கு செல்ல வேண்டும். மொத்தம் எத்தனை தெருக்கள் உள்ளன என்பதை பார்த்து அதற்கேற்ப குழுக்களுக்குத் தெருக்களை ஒதுக்க வேண்டும். ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**செயல்பாடு-02**

**படிநிலை-01-களப் பணியைத் தொடங்குதல்**

1. குழந்தைகள் ஒவ்வொரு வீடாகச் சென்று தங்கள் களப்பணியை தொடங்க வேண்டும்.
2. ஒன்று முதல் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விவரங்களை சேகரிக்கவும்.
3. வீடுகளில் மக்களைச் சந்திக்கும் போது, தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ளவது அவசியம். குறிப்பாக அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தைப் பற்றித் தெளிவாகக் கூறுவது சிறந்தது.
4. "**நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை**" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட 10 கேள்விகளில் வாய்ப்புள்ள கேள்விகளுக்கான பதில்களை தகவல்களாகத் திரட்டவும்.

**படிநிலை – 02 - தகவல்களைத் தொகுத்து அறிக்கைத் தயார் செய்தல்**

கள அனுபவத்தில் கிடைத்த தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து விவாதிக்க வேண்டும். பின்னர் அவற்றை பல்வேறு தலைப்புகளில் வகைப்படுத்தி அறிக்கையாகத் தொகுக்கவும். "**நமது ஊரில் குழந்தைகளின் கல்வி நிலை**" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட 10 கேள்விகளையே பல்வேறு தலைப்புகளாக எடுத்து வகைப்படுத்தலாம்.

## செயல்பாடு-03 - நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் (Sustainable Development Goals-SDG)

குழந்தைகளே! இப்பயணத்தில் அனைவரையும் உள்ளடக்கிய, சமமான, தரமான கல்வியை உறுதிச் செய்யும் வகையில் ஐ.நா சபை சில இலக்குகளை 2030க்குள் நிறைவு செய்ய திட்டம் வகுத்துள்ளது. இதனை இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் தத்தமது நாடுகளில் செயல்படுத்தி வருகின்றன. அவ்வகையில் நம் பகுதியில் கீழ்க்கண்ட இலக்கு, அதன் வெளிப்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பதைக் கேட்டுக் குறிப்புகள் எழுதிய பிறகு உங்கள் கலந்துரையாடலின் போது பகிர்ந்து கொள்ளவும்.

1) எத்தனைக் குழந்தைகளுக்குத் தங்களின் வகுப்புப் புத்தகத்தை வாசிக்க, எழுத, கணக்குப் போட தெரிகிறது என்பதை அறிந்து அதனைக் குறிப்பெடுத்துக் கொள்ளவும்.
2) எத்தனைக் குழந்தைகள் பள்ளிக்கு செல்கின்றனர். எத்தனைக் குழந்தைகள் பள்ளி செல்லாமல் உள்ளனர்.
3) அங்கன்வாடி, நர்சரி பள்ளிகளுக்கு செல்லும் குழந்தைகள் எத்தனை?
4) நம்ம ஊரில் கல்லூரிகளில் பயிலவோர் எண்ணிக்கை விவரம்

5) நம்ம ஊரில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை
6) நம்ம ஊரில் உள்ள பள்ளியில் எவ்வகையான வசதிகள் உள்ளன (உறுதியான கட்டிடம், சுத்திகரிகப்பட்ட குடிநீர், தண்ணீர் வசதியுள்ள கழிப்பறை, சுற்றுச்சுவர், விளையாட்டுத்திடல், முதலுதவிப் பெட்டி, மாணவர்களின் மனசாட்சிப் பெட்டி போன்றவை)

மேற்கண்டவற்றை குழுவாக இணைந்து அறிக்கையாக தொகுக்க வேண்டும்.

**தகவல்களைத் தொகுத்து அறிக்கை தயார் செய்தல்:**

1. திரட்டப்பட்ட தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தி அறிக்கையாக தொகுக்கலாம். சான்றாக,
    a. குழந்தைகள் வயது வாரியாக,
    b. படிக்கும் வகுப்பு வாரியாக,
    c. பள்ளி செல்லா குழந்தைகள் வாரியாக,
    d. அவர்களில் ஆண் பெண் எண்ணிக்கை வாரியாக சேகரித்தல்.

## நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

## இலக்கு 4. அனைவரையும் உள்ளடக்கிய, சமமான, தரமான கல்வி

### உங்களுக்குத் தெரியுமா?

- ஏறக்குறைய 100 கோடிக் குழந்தைகள் பல்வேறு விதமான வறுமைச் சூழலில் எவ்வித அத்தியாவசிய சேவைகளும் கிடைக்காமல் வாழ்கின்றனர்.
- பள்ளிகள் மூடப்பட்ட போது, குறைந்தது 463 கோடிக் குழந்தைகள் இணையவழிக் கற்றலைக் கூட அணுக முடியவில்லை.
- 5 வயதுக்குட்பட்ட 70 இலட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- பள்ளிகள் மூடப்பட்டதால், 37 கோடிக் குழந்தைகள் சத்தான உணவை பெறமுடியாத நிலை.
- கோவிட்-19 காரணமாக, இந்தப் பத்தாண்டு இறுதிக்குள் சுமார் 1 கோடி குழந்தைத் திருமணங்கள் நிகழலாம்.

- 2020 இல் கொரோனா காலக்கட்ட சூழலில் யுனிசெப் பன்னாட்டு அமைப்பின் ஆய்வறிக்கை (https://data.unicef.org/covid-19-and-children)

# வாண்டுகள் பயணம்-4

# சுத்தமும் சுகாதாரமும்

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு**

**இலக்கு 6. அனைவர்க்கும் சுத்தமான நீர், சுகாதாரம்**

# 4. சுத்தமும் சுகாதாரமும்

**நோக்கங்கள்**

1) நமது பகுதியின் பொது சுகாதாரத்தின் நிலை குறித்து களப்பணி வாயிலாக தெரிந்து கொள்ளல்.
2) நமது நலவாழ்வு என்பது ஓர் அடிப்படை உரிமை என்பதை அறிந்து கொள்ளல்.
3) நோயற்ற சமூகத்தை அமைப்பதற்கான நோய் தடுப்பு முறைகளையும் அதை நோக்கிய அரசின் கடமைகளையும் அறிந்து கொள்ளுதல்.

## 1. அறிமுகம்

முந்தைய பாடத்தில் குழந்தைகளின் கல்வி குறித்தும் நம்ம ஊரில் அதன் நிலையையும் தெரிந்து கொள்ளும் நோக்கில் களப் பணியை மேற்கொண்டோம். கல்வியும் பொதுச் சுகாதாரமும் நமக்கும் நாம் வாழும் சமூகத்திற்கு அடிப்படைத் தேவைகளாகும். சுகாதாரம் என்பது மக்களின் அடிப்படை நல உரிமையாகும். சுகாதாரம் பாதிக்கப்படும் போது மக்கள் பல வகையான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். நீர், காற்று மூலம் பரவும் பல வகையான தொற்று நோய்களுக்கு சுகாதாரச் சீர்கேடே காரணமாகிறது. ஒரு நாகரிகச் சமூகம் என்பதன் அடையாளம் பொதுச் சுகாதாரத்தைச் சிறப்பாக பேணுவதேயாகும்.

## 2. நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு - பொது சுகாதாரம் குறித்த களப்பணி

நமது ஊரின் பொதுச் சுகாதாரம் பற்றி பேசும்போது குடிநீர், கழிப்பறை வசதி, கழிவு நீர் செல்ல போதிய வசதி, மழை நீர் வடிவதற்கான வசதி, மருத்துவமனை, சுகாதார நிலையம், சுகாதாரப் பணியாளர்கள், செவிலியர்கள், தொற்று பரவலுக்கான தடுப்பு நடவடிக்கைகள் போன்றவை குறித்து அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. எனவே நமது களப்பணியில் மேற்சொன்னவை குறித்து தகவல்களைத் திரட்டுவது அவசியமானது. இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட கேள்விகள் அடிப்படையில் தகவல்களைத் திரட்டுவோமா?

1. **நமது பகுதி குடிநீர் குறித்த தகவல் திரட்டல்**
   a. நமது ஊரில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கிறதா?
   b. அது எங்கிருந்து கிடைக்கிறது? (ஆற்று நீர் - குழாய் வழியாக, குளத்து நீர், கிணற்று நீர், ஆழ்குழாய் நீர் - அடிபம்பு)
   c. அந்த நீரின் நிறம் எவ்வாறு உள்ளது?
   d. அந்த நீரின் சுவை எப்படி இருக்கிறது?
   e. நமக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்கிறதா?

2. **நாம் பயன்படுத்தும் கழிப்பறை வசதிகள் குறித்த தகவல் திரட்டல்**

a. நமது பகுதியில் அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி உள்ளதா?

b. நமது பகுதியில் திறந்தவெளியில் மலம் கழிக்கின்றனரா?

c. அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றித் தெரியுமா?

d. நமது பகுதியில் பொதுக் கழிப்பறை வசதிகள் உள்ளனவா?

e. ஆம் எனில், அதில் போதுமான தண்ணீர் வசதியும் சுத்தப்படுத்துவதற்கான சுகாதாரப்பணியாளர் வசதியும் உள்ளதா?

f. பொதுக் கழிப்பறை இல்லை எனில் அதற்கான காரணங்கள் என்ன?

g. பொதுக் கழிப்பறை கட்டுவதற்கு அரசு அலுவலர்களுக்கு மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளனவா?

h. ஊரக வளர்ச்சித் துறை, கிராம ஊராட்சி மூலமாக மானிய விலையில் கழிப்பறைக் கட்ட நிதி ஒதுக்குவது பற்றித் தெரிந்துள்ளனரா?

i. அத்திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகளில் கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

j. கழிவு நீர் செல்ல போதிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது சாலையிலேயே தேங்கியுள்ளதா?

k. அனைத்து வீடுகளிலும் சோப்புப் போட்டுக் கை கழுவும் வசதிகள் உள்ளதா?

l. அனைவர்க்கும் சோப்பு போட்டுக் கை கழுவும் பழக்கம் உள்ளதா?

m. குடியிருப்புகளின் அருகில் தொழிற்சாலைகள் ஏதேனும் உள்ளதா? அதன் கழிவுநீர் எங்கு செல்கிறது?

3. **நமது பகுதி மருத்துவமனை வசதி குறித்த தகவல் திரட்டல்**

a. நமது பகுதியில் அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதாரநிலையம் உள்ளதா?

b. ஆம் எனில், எவ்வளவு தொலைவில் உள்ளது?

c. அந்த மருத்துவமனை / ஆரம்ப சுகாதாரநிலையத்தில் மருத்துவர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இருக்கிறார்களா?

d. அந்த மருத்துவமனை / ஆரம்ப சுகாதாரநிலையத்தில் செவிலியர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் இருக்கிறார்களா?

e. நமது பகுதியில் நாட்டு மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி, ஓமியோபதி, அக்குபஞ்சர் போன்ற பிற மருத்துவ முறைகள் பயன்பாட்டில் உள்ளதா?

f. நமது பகுதியில் மருந்துக் கடை உள்ளதா?

g. 108 அவசர ஊர்தி பயன்பாடு குறித்து நமது பகுதி மக்கள் அறிந்துள்ளனரா?

h. நமது பகுதியில் தனியார் மருத்துவமனை உள்ளதா?

i. நமது பகுதியில் பெரும்பாலான மக்கள் அரசு மருத்துவமனைக்குச் செல்கின்றனரா அல்லது தனியார் மருத்துவமனைக்குச் செல்கின்றனரா? அதற்கான காரணங்கள் என்ன?

4. **நோய் தடுப்பு முறைகளும் நலவாழ்வும்**

a. கொரோனோ பெருந்தொற்று பரவலைத் தடுப்பதற்கு நமது பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தடுப்பு முறைகள் யாவை?

b. இந்த பெருந்தொற்று பரவலைத் தடுப்பதற்கு சுகாதாரத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

c. கொரோனோ பெருந்தொற்று நம்மை தாக்காமல் இருக்க நமது பகுதியில் அனைவரும் இரண்டு முறை தடுப்பூசி போட்டுள்ளனரா?

d. குழந்தைகளுக்கு செலுத்தப்படும் தட்டம்மை, போலியோ, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கான தடுப்பு மருந்து முறையாக செலுத்தப்படுகிறதா?

e. வழக்கமாக ஒரு நோய் நம்மைத் தாக்கும்போது, நாம் மேற்கொள்ளும் தடுப்பு முறைகள் என்ன?

f. நோயைத் தடுக்கக்கூடிய பாரம்பரிய மருத்துவ குணமுள்ள சத்தான உணவு முறைளை நம் பகுதியில் உள்ள மூத்தோரிடம் கேட்டு பட்டியலிடவும்.

மேற்கண்ட நான்கு விதமான களப்பணிகளுக்கும் உங்கள் மன்ற நெறியாளரின் வழிகாட்டலோடு சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சென்று அரசு அலுவலர்களை நேரில் சந்தித்து தேவைப்படும் தகவல்களை திரட்டலாம்.

## 3. களப்பணியை நடைமுறைப்படுத்தும் முறை:

### செயல்பாடு-01

**படிநிலை-01-குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்**

1. குழந்தைகளை ஐந்து பேர் கொண்ட குழுக்களாகப் பிரிப்பது அவசியம். அவ்வாறு பிரிக்கும் போது ஆண் பெண் குழந்தைகள் எண்ணிக்கைச் சமமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளல் அவசியம்.
2. ஒவ்வொரு குழுவில் உள்ள குழந்தைகளில் இருந்து ஒரு பொறுப்பாளரை தேர்வு செய்ய வேண்டும். இதில் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

**படிநிலை-02-கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்லுதல்**

1. அனைவரும் கிராமத்தின் மையப் பகுதிக்குச் செல்ல வேண்டும். மொத்தம் எத்தனைத் தெருக்கள் உள்ளன என்பதைப் பார்த்து அதற்கேற்ப குழுக்களுக்குத் தெருக்களை ஒதுக்க

வேண்டும். ஒதுக்கும் போது குடியிருப்புகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**செயல்பாடு-02**

**படிநிலை-01-களப்பணியைத் தொடங்குதல்**

1. தகவல் சேகரிக்கும் போது தாங்கள் யார் என்பதைத் தெளிவாக அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக மன்றத்தைப் பற்றி தெளிவாகக் கூற வேண்டும்.
2. களப்பணியைத் தொடங்கும் முன்பு முதலில் தெருக்களுக்குச் சென்று அவை எவ்வாறு உள்ளன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.
3. பொதுக் குடிநீர்ப் பிடிக்கும் இடத்தில் உள்ள நீரைப் பார்த்து அது எப்படி உள்ளது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.
4. கிராமத்தை முழுமையாக சுற்றிப்பார்த்து உற்றுநோக்கித் தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.
5. இறுதியாக பொதுமக்களிடம் தங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கேட்டுப் பெறலாம்.

**செயல்பாடு-03**

**படிநிலை-01- தவல்களைத் தொகுத்து அறிக்கை தயாரித்தல்:**

1. தாங்கள் பார்த்த, கேட்ட, உற்று நோக்கிய தகவல்களை அறிக்கையாகத் தொகுக்க வேண்டும்.
2. தொகுத்த அறிக்கையிலிருந்து தாங்கள் கண்டறிந்தவைகளை அடிப்படையாக வைத்து தங்களுடைய பரிந்துரைகளை அளிக்கலாம்.
3. பரிந்துரைகளை அடுத்த மன்றக் கூட்டத்தில் பகிரந்து கொள்ள வேண்டும். பிறகு அதனை உள்ளாட்சித் தலைவர்கள், தொடர்புடைய பிற துறைகளின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்.
4. மன்றத்தில் கலைக், கல்வி, பண்பாடு போன்ற துணைக் குழுக்களை உருவாக்கி அவற்றின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், நாடகங்கள் போட்டிகளைக் கிராம அளவில் நடத்தலாம்.

# வாண்டுகள் பயணம்-5

# பாலின சமத்துவமும் பங்கேற்பும்

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்**

**இலக்கு - 5 பாலின சமத்துவமும் பங்கேற்பும்**

# 5. பாலின சமத்துவமும் பங்கேற்பும்

## நோக்கங்கள்

1) பாலின சமத்துவம் குறித்து தெரிந்து கொள்ளல்.
2) நமது பகுதியில் பல்வேறு நிலைகளில் பாலின சமத்துவம் நிலவுகிறதா என்பதை கள அனுபவம் மூலமாக அறிந்து கொள்ளல்
3) பல்வேறு நிலைகளில் பெண்களின் முழுமையான பங்கேற்பு இருத்தல் அவசியம் என்ற புரிதலை உருவாக்குதல்.

## அறிமுகம்

குழந்தைகளே!

முந்தைய பாடத்தில் நலவாழ்வு குறித்தும் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கான அடிப்படைத்தேவைகள் குறித்தும் விரிவாகப் பார்த்தோம். நம் சமூகத்தில் ஆண்களும் பெண்களும் எண்ணிக்கையில் ஏறத்தாழ சம அளவில் இருக்கிறோம். இன்றைய சூழலில் திருநர்கள் மீதான மாண்பும் புரிதலும் ஏற்பட்டுள்ளது. எனவே, பாலின சமத்துவம் குறித்து கூடுதலாக சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. குடும்பங்களில், பள்ளிகளில், வேலை செய்யும் இடங்களில், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமமான அளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா? அனைத்துத் தளங்களிலும் பெண்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறதா?

பெண்களும், ஆண்களும் சமூகத்தில் சமமான முக்கியத்துவம் பெறும் வகையில் உலகளவில், தேசிய அளவில் பல்வேறு சட்டங்களும் திட்டங்களும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், பாலினம் சார்ந்த பாகுபாடுகள் ஏற்றத்தாழ்வுகள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் போன்றவை நம் சமூகத்தில் நிறைந்தே உள்ளன. பிறரைத் துன்புறுத்துவதும், வன்முறைகளுக்கு உட்படுத்துவதும் நாகரிகமான சமூகத்திற்கு அடையாளம் அல்ல. ஒரு பக்கம் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறைந்த இச்சமூகத்தில், மறுபக்கம் திருநர், திருநங்கைகள் மீதான வன்மங்களும் வன்முறைகளும் நிறைந்துள்ளன. நம் ஊரில் பாலின சமத்துவம், பங்கேற்பின் நிலை எவ்வாறு உள்ளன என்பதை அறிவதுடன், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நாம் மேற்கொள்ளும் இப்பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

## திட்டமிடுதல்:

1. அரசியலமைப்பு உரிமைக் கல்வி மன்றத்தில் உள்ள குழந்தைகளுக்கு பாலின சமத்துவம் குறித்து கலந்துரையாடல்கள் மூலம் புரிதலை உருவாக்குவது.
2. பாலின சமத்துவம் குறித்து கள அனுபவத்திற்கான திட்டமிடலில் கேள்விகளைத் தயார் செய்வது.

## பாலின சமத்துவம் குறித்த களப்பணி

இதற்கு முந்தைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், களப் பணிக்காக நாம் குழுக்களாக பிரிந்து, மையப்பகுதியில் கூடி, ஒவ்வொரு தெருவாக சென்று திட்டமிட்ட கேள்விகளுக்கான பதில்களை, விவரங்களை பெறுவது. தகவல் திரட்ட வேண்டிய கேள்விகள் பின்வருமாறு.

1. நம்ம பகுதியில் உள்ள பெண்களின் கல்வி நிலை
    a. பள்ளிக்கூடம் சென்று கல்வி பயிலாத பெண்களின் எண்ணிக்கை?
    b. ஆரம்பக் கல்வி வரை படித்த பெண்களின் எண்ணிக்கை?
    c. நடுநிலைக் கல்வி வரை படித்த பெண்களின் எண்ணிக்கை?
    d. உயர்நிலைக் கல்வி வரை படித்த பெண்களின் எண்ணிக்கை?
    e. மேல்நிலைக் கல்வி வரை படித்த பெண்களின் எண்ணிக்கை?
    f. இளங்கலை கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை?
    g. முதுகலை கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை?
    h. தொழில்நுட்ப கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை?
    i. தொழில்நெறிமுறைக் கல்வி படித்த பெண்களின் எண்ணிக்கை? (மருத்துவம், பொறியியல், வழக்கறிஞர், அறிவியல் அறிஞர் உள்ளிட்டவை)
    j. முனைவர் பட்டம் பெற்ற பெண்களின் எண்ணிக்கை?
2. நம்ம பகுதியில் அரசுப் பணிகளில் எத்தனைப் பெண்கள் உள்ளனர்? அவர்கள் வகிக்கும் பதவி குறித்த விவரங்களை சேகரிக்கவும்.
3. நம்ம பகுதியில் அரசுப் பணி அல்லாத தனியார் துறையில் வேலை செய்யும் பெண்களின் எண்ணிக்கை?

4. நம்ம பகுதியில் அமைப்பு சாரா துறையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை?
5. பணித்தளங்களில் பெண்களுக்கான அங்கீகாரம் உள்ளதா?
6. ஒரே மாதிரியான வேலைக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறதா?
7. பெண் என்பதாலே சமூகத்திலும் பணித்தளங்களிலும் பாகுபாடு காட்டப்படுகின்றனரா? ஆம் எனில், எவ்வகையான பாகுபாடு?
8. கடந்த இரண்டு ஆண்டுகளில், நம்ம பகுதியில் பள்ளி செல்லா பெண் குழந்தைகளின் எண்ணிக்கை? அதற்கான காரணங்கள் என்ன?
9. நம்ம பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்கிறதா?
10. நமது வீடுகளில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் சமமாக நடத்தப்படுகின்றனரா? ஆம் எனில், எவ்வாறு?

## தகவல் திரட்டல், அறிக்கை தொகுப்பு, கலந்துரையாடல்

களப்பணியின் போது திரட்டிய தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு துணை தலைப்புகளாக வகைப்படுத்தி அறிக்கையாக தொகுக்கலாம். மன்றக் குழந்தைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து களப்பணியின் போது திரட்டிய தகவல்கள் குறித்து கலந்துரையாடலாம். அதன்படி ஓரிரு செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

## முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள்

1. மன்ற உறுப்பினர்கள் இணைந்து தங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்தலாம்.
2. ஒவ்வொரு வீடாகச் சென்று பெண்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுக் கலந்துரையாடல்களை நிகழ்த்தலாம்.
3. ஊராட்சி மன்றத் தலைவர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்களைச் சந்தித்து பெண் குழந்தைகளின் கல்வி, பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள், பணியிடங்களில் பெண்கள் மீதான பாகுபாடுகள், வன்முறைகள், பெண்களுக்கு வழங்கப்படும் சமமற்ற ஊதியம் போன்றவை குறித்து முறையிடலாம்.

# வாண்டுகள் பயணம்-6

# உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும்

**நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்**

இலக்கு 2: பட்டினியைப் போக்குதல், உணவுப் பாதுகாப்பை எட்டுதல், ஊட்டச்சத்தை மேம்படுத்துதல்

# 6. உள்ளாட்சி அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளும்

## நோக்கங்கள்

1) உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, பணிகள் குறித்து தெரிந்து கொள்ளல்.
2) நமது பகுதியில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களை கள அனுபவம் மூலம் அறிந்து கொள்ளல்
3) கிராமங்களின், நகரங்களின் முழுமையான வளர்ச்சிக்கு உள்ளாட்சி மன்றங்களின் பங்களிப்பு மிக அவசியம் என்ற புரிதலை உருவாக்குதல்.

## அறிமுகம்

குழந்தைகளே! இந்தியா ஒரு சனநாயக நாடு என்பதும் மக்களாட்சி அமைப்பு முறையைக் கொண்டது என்பதும் நம் அனைவருக்கும் தெரியும். நமது ஆட்சியாளர்களை நாம் அனைவரும் சேர்ந்து வாக்களித்து தெரிவு செய்யும் முறையே சனநாயகக் குடியரசின் முக்கிய பண்பாகும். அவ்வப்போது தேர்தல் தொடர்பான செய்திகளைக் கேட்டிருப்போம், நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் இது குறித்த செய்திகளைப் பார்த்திருப்போம். எதற்காக இத்தேர்தல்கள் நடைபெறுகின்றன என்று தெரியுமா?

நம்மை ஆளும் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சிப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவே தேர்தல்கள் நடைபெறுகின்றன. நாடாளுமன்றம், சட்டமன்றம் போலவே பஞ்சாயத்து ராஜ் என்று அழைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களும் மக்களாட்சி கூறுகளில் ஒன்றாகும். இந்த மூன்றடுக்கு நிலை இந்திய மக்களாட்சியின் சிறப்பு அம்சமாகும்.

மேற்கண்ட மன்றங்களில் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி அதிகாரத்தில் அமர்வோர் மக்கள் நலனுக்கான திட்டங்களையே தீட்டுவார்கள். அத்திட்டங்களைப் பொருத்தமான துறைகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்துவது அவர்களது கடமைகளாகும்.

இந்திய அளவில் நாடாளுமன்றமும், தமிழக அளவில் சட்டமன்றமும் இருந்தாலும் மிகுதியாக மக்கள் பங்கேற்கும் அமைப்பாக உள்ளாட்சி அமைப்புகளே உள்ளன. சனநாயகத்தை நாம் நேரடியாக, அருகிலேயே கண்டுணரும் ஓர் அமைப்பாக இயங்குபவையே இந்த உள்ளாட்சி அமைப்புகள். இந்த உள்ளாட்சியின் அதிகாரங்கள், செயல்பாடுகள் குறித்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் இப்பயணம் அமையும்.

## களப் பணி: கிராம ஊராட்சி அலுவலகத்தைப் பார்வையிடுதல்

நம்ம கிராம ஊராட்சி அலுவலகத்தை போய் பார்ப்போமா? நம்ம ஊராட்சி மன்றத் தலைவரையும் ஒரு சில உறுப்பினர்களையும் நேரில் சந்தித்து நம்ம ஊராட்சி அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றி அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வோமா? அத்தோடுகூட அவர்களது கடமைகளையும் பொறுப்புகளையும் தெரிந்து கொள்வோமா?

### உங்களுக்குத் தெரியுமா?

**தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்-1994 இன்படி தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.**

- **கிராம ஊராட்சி மன்றம்** – தலைவர், உறுப்பினர்கள்
- **ஊராட்சி ஒன்றிய மன்றம்** - ஒன்றிய தலைவர், ஒன்றிய குழ உறுப்பினர்கள்
- **மாவட்ட ஊராட்சி** - மாவட்டக் குழுத் தலைவர், உறுப்பினர்கள்.
- ஊராட்சிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கை மக்கள் தொகையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அமையலாம்
    - 500 முதல் 2000 வரை - 6 உறுப்பினர்கள்
    - 2000 முதல் 6000 வரை - 9 உறுப்பினர்கள்
    - 6000 முதல் 10000 வரை-12 உறுப்பினர்கள்
    - 10000த்திற்கும் அதிகமான உறுப்பினர்கள்
- கிராம ஊராட்சியில் 2 முதல் 5 வார்டுகள் இருக்கும்.
- பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு பிரதிநிதித்துவம்.
- மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- கட்டாயம் குறைந்தது இரண்டு கிராம சபைக் கூட்டங்கள் நடத்த வேண்டும்.

1. ஊராட்சி அலுவலகம் சென்ற பின்பு அலுவலகத்தை முழுமையாக சுற்றிப் பார்த்துவிட்டு ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி உதவியாளரை சந்தித்து தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளலாம்.
2. சந்திப்பிற்கான நோக்கத்தை நெறியாளர் பகிர்ந்து கொள்ளலாம்.
3. அதில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றம் பற்றியும் நமது பகுதியில் அதன் செயல்பாடுகள் பற்றியும் விளக்கமாகக் கூறலாம்.

4. ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது உறுப்பினர்கள் தெரிவுச் செய்யப்படும் முறையை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஊராட்சி மன்ற அலுவலகம் செயல்படும் முறையையும் இந்த உரையாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.
5. இறுதியாக, மன்றக் குழந்தைகள் தங்களின் சந்தேகங்களையும் கேள்விகளையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.
6. சந்திப்பின் நினைவாக மன்றக் குழந்தைகள் ஊராட்சித் தலைவர், உறுப்பினர்களுடன் இணைந்து குழுப் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.
7. இந்தச் சந்திப்பு குறித்து தினசரி நாளிதழ்களுக்கு பத்திரிக்கைச் செய்தி அளிக்கலாம்.

## கிராம ஊராட்சிகளின் கடமைகளும், அதிகாரங்களும்

1. கிராமத்தில் சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல்
2. கிராம மனையிடங்களை விரிவாக்குதல், கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி அளித்தல்
3. பொது இடங்களில் தெருவிளக்கு வசதி செய்தல்
4. வடிகால் வசதிகளைச் செய்தல்
5. பொது இடங்களைத் துப்புரவாக்குதல் அல்லது சுத்தப்படுத்துதல்
6. பொதுக் கழிப்பிடங்களுக்கு ஏற்பாடு செய்தல்
7. இடுகாடுகளையும் சுடுகாடுகளையும் ஏற்படுத்தி அவற்றை பேணி வருதல்
8. பொதுக் கிணறுகள் தோண்டுதலும் பழுது பார்த்தலும்
9. பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல், அவற்றைப் பேணி வருதல்
10. வாகன நிறுத்தம் அமைத்தல்
11. கால்நடைகளுக்கான தொழுவங்கள் ஏற்படுத்துதல்
12. பொது இறைச்சிக் கூடங்கள் ஏற்படுத்துதல்
13. பொதுப் படிப்பகங்கள் ஏற்படுத்துதல்
14. தொழில்நுட்ப வசதிகள், விளையாட்டு மைதானம், உடற்பயிற்சிக் கூடங்கள் நிறுவுதல்
15. எழுத்தறிவு, சமூகக் கல்விக்கான மையங்களை ஏற்படுத்துதல்
16. குடிக்க, குளிக்க, கழுவுவதற்கான நீர் ஆதாரங்களை உருவாக்குதல்
17. மருந்தகங்களை நிறுவுதல்
18. மகப்பேறு, குழந்தைகள் நல மையங்களை ஏற்படுத்துதல்
19. தொடக்கப் பள்ளிகளை அமைத்தல்

20. கொள்ளை நோய்களைத் தடுத்தல்
21. பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்தல்
22. சலவை செய்தல், குளிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்துதல்
23. சாலை ஓரங்களில் ஆபத்தான கட்டிடங்கள், மரங்கள் இருந்தால் அவற்றை அகற்றுதல்.
24. சமயம் சார்ந்த நிகழ்வுகள் நடந்தால் பொது மக்கள் நலன், பாதுகாப்பு வசதிகள் ஏற்ப்படுத்துதல்
25. அரசுக்கு பெரியம்மை, காலாரா போன்ற தொற்று நோய்கள் குறித்த தகவல்களை அளிப்பது, அது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
26. ஆபத்தான ஏரிகள், குளங்கள், கிணறுகள், குழிகள் குறித்த முன்னெச்சரிக்கைப் பணிகளைச் செய்தல்.
27. உள்ளாட்சி அளவில் பல வகையான வரிகளை வசூலித்தல்
28. தொடக்கக் கல்விச் சட்டம் 1920ன் கீழ் வசூலிக்கப்படும் கல்வி வரியை ஊராட்சியில் உள்ள பள்ளிகளின் மேம்பாட்டிற்கு பயன்படுத்துதல்.
29. கடைகளில் உள்ள எடைக் கருவியையும் அதன் அளவுகளையும் சோதனையிடுதல்
30. உள்ளாட்சியில் உள்ள பொதுச் சொத்துகளை ஏலத்திற்கு விடுதல்
31. உள்ளாட்சிப் பகுதியில் விளம்பரப் பலகை வைப்பதற்கான அனுமதி அளித்தல்

உலக நாடுகள் அனைத்தும் இணைந்து 2030க்குள் உலகில் காணப்பெறும் மிக முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 17 இலக்குகளை நிர்ணயித்துள்ளன. அதனடிப்படையில் ஒவ்வொரு நாடும் அதற்கான வளர்ச்சி இலக்கை அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அவ்வகையில் அரசமைப்பு உரிமைக் கல்வி மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் நமது கிராமத்தின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை நமது களப்பணி மூலம் அறிந்து அதனை நமது குழுவில் பகிர்ந்து கொள்ளலாம்.

## களப்பணி: உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்கள்

இதற்கு முந்தைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், களப் பணிக்காக நாம் குழுக்களாக பிரிந்து, மையப்பகுதியில் கூடி, ஒவ்வொரு தெருவாக சென்று திட்டமிட்ட

கேள்விகளுக்கான பதில்களை, விவரங்களை பெறுவது. தகவல் திரட்ட வேண்டிய கேள்விகள் பின்வருமாறு.

1) நமது பகுதியில் “சுத்தமான பாதுகாக்கப்பட்ட குடிநீர்” அனைவருக்கும் கிடைக்க நமது ஊராட்சி மன்றம் செயல்படுத்திய திட்டங்கள் எவை?
2) நமது பகுதியில் “நோய்த் தொற்று பரவாமல் இருக்க” நமது ஊராட்சி மன்றம் முன்னெடுத்த தடுப்பு நடவடிக்கைகள் என்ன?
3) நமது பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் அமைக்கவும் பராமரிக்கவும் நமது ஊராட்சி மன்றம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?
4) ஊராட்சி மன்றத்தால் நமது பகுதியில் நூலகம் அமைக்கப்பட்டுள்ளதா? அது முழுமையான பயன்பாட்டில் உள்ளதா?
5) நமது பகுதியில் இருக்கும் தொடக்கப்பள்ளி சிறப்பாக இயங்க என்னென்ன வசதிகளை ஊராட்சி மன்றம் ஏற்படுத்திக் கொடுக்கிறது?
6) நமது பகுதியில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாக இயங்க என்னென்ன வசதிகளை ஊராட்சி மன்றம் ஏற்படுத்திக் கொடுக்கிறது?
7) நம் பகுதியில் சாலை மேம்பாட்டிற்கும் பராமரிப்பிற்கும் உள்ளாட்சி மன்றம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது?
8) இந்த ஆண்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட பொருட்கள் எவை? நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நிலை என்ன?

## தகவல் திரட்டல், அறிக்கை தொகுப்பு, கலந்துரையாடல்

களப்பணியின் போது திரட்டிய தகவல்களை அனைவரும் ஒன்றாக ஓரிடத்தில் அமர்ந்து தொகுக்க வேண்டும். அவற்றைப் பல்வேறு துணை தலைப்புகளாக வகைப்படுத்தி அறிக்கையாக தொகுக்கலாம். மன்றக் குழந்தைகள் அனைவரும் ஒன்றாக இணைந்து களப்பணியின் போது திரட்டிய தகவல்கள் குறித்து கலந்துரையாடலாம். அதன்படி ஓரிரு செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

# வாண்டுகள் பயணம்-7

# மக்கள் நலத் திட்டங்கள்

# 7. மக்கள் நலத் திட்டங்கள்

**நோக்கங்கள்**

1) உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, பணிகள் குறித்து தெரிந்து கொள்ளல்.
2) நமது பகுதியில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களை கள அனுபவம் மூலம் அறிந்து கொள்ளல்
3) கிராமங்களின், நகரங்களின் முழுமையான வளர்ச்சிக்கு உள்ளாட்சி மன்றங்களின் பங்களிப்பு மிக அவசியம் என்ற புரிதலை உருவாக்குதல்.

## 1. அறிமுகம்

முந்தையப் பாடத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, பணிகள் குறித்தும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களை கள அனுபவம் மூலம் நாம் அனைவரும் தெரிந்து கொண்டோம். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசு தான் நல்ல அரசாக இருக்க முடியும். அவ்வகையில், மக்களின் நலனை மையப்படுத்திய பல நலத் திட்டங்களை ஒன்றிய அரசும், தமிழக அரசும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

பெரும்பாலான மக்கள் நலத் திட்டங்கள் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட ஏழை எளிய மக்களை முன்னேற்றுவதற்கும் பொருளாதார நலிவுற்ற நிலையில் இருந்து அவர்களை மேம்படுத்துவதற்கும் பயன்படும். சமுகத்தில் மிகவும் பின்தங்கி நலிவுற்ற நிலையில் இருக்கும் பல்வேறு தரப்பினர் இத்திட்டங்களால் பயன்பெறுவர்.

1. பட்டியல் இனத்தவர்கள்
2. பழங்குடியினர்
3. சீர்மரபினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர்
4. சமயச் சிறுபான்மையினர்
5. பொருளாதார ரீதியாக ஏழ்மையில் உள்ளவர்கள்
6. வேலை வாய்ப்பற்றவர்கள்
7. பெண்கள்
8. குழந்தைகள்
9. மாற்றுத் திறனாளிகள்
10. திருநர்கள்
11. இடம்பெயர்ந்தோர், ஏதிலிகள் (அகதிகள்)
12. பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்கள்

மக்கள் நலத்திட்டங்கள் பெரும்பாலும் மாநில அரசின் மூலமாகவும் நம் உள்ளூர் அரசாங்கமான கிராம ஊராட்சிகளின் மூலமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இப்பாடத்தின் நோக்கம் நம் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மக்கள் நல திட்டங்களின் நோக்கங்களையும் அவற்றின் பயன்பாட்டினையும் அறிந்து கொள்வதேயாகும்.

## 2. நம் மன்றத்தில் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த பயிற்சி வகுப்பு

நமது அரசமைப்பு உரிமைக் கல்வி மன்றக் கூட்டத்தில் மக்கள் நலனுக்காக அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் பற்றி நெறியாளர் சுருக்கமாக குழந்தைகளுக்கு கூற வேண்டும். குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு விளக்கமாகக் பதிலளிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக சில திட்டங்கள் உங்களின் பார்வைக்கு இணைக்கப்பட்டுள்ளன.

1. பள்ளி மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்
2. சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்கள்
3. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்)
4. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்
5. ஆதிதிராவிடர் நலத் திட்டங்கள்
6. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
7. பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்
8. ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்
9. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
10. தமிழ்நாடு அரசு மூன்றாம் பாலினர் நல வாரியம்
11. தேசிய ஓய்வூதியத் திட்டம்
12. முதியோர் நல பராமரிப்புத் தேசியத் திட்டம்
13. முதியோர்களைப் பாதுகாக்க சிறப்புத் திட்டங்கள்
14. பிரதம மந்திரியின் ஆவாஸ் யோஜனா (நகர்ப்புறங்களில் அனைவர்க்கும் வீடு)

1. முதலில் கிராம ஊராட்சி அலுவலகத்திற்குச் சென்று என்னென்ன மக்கள் நலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அந்தத் திட்டங்கள் எங்கு நடைபெறுகிறது என்ற தகவலையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.
2. மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதிகளைத் தெரிந்து கொள்ள முறையாக கிராம ஊராட்சித் தலைவரிடம் அனுமதி கோரலாம். அனுமதி பெற்ற பின்பே அப்பகுதிகளைப் பார்வையிடலாம்.

3. ஒரு குறிப்பிட்ட நாளை நெறியாளரிடம் கலந்து பேசி முடிவு செய்யுங்கள். குறிப்பிட்ட தேதியில் காலையில் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூடி மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதிகளைப் பார்வையிடச் செல்லுதல்.
4. குழந்தைகளின் பாதுகாப்பு மிக முக்கியம். அதனால் பாதுகாப்பு முறைகளைக் கூறுவதோடு கண்காணிக்கவும் வேண்டும்.
5. பணி செய்யும் இடத்தில் அனைவரும் அமைதியாக உற்று நோக்குவதோடு தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ஒருவர் பின் ஒருவராகக் கேட்க வேண்டும்.
6. பணி செய்யும் இடங்களில் கூச்சல், சத்தம் போடக் கூடாது. நாம் பிறர்க்கு சங்கடத்தை ஏற்படுத்தக் கூடாது.

## 3. நடைமுறைப்படுத்தும் முறை

**செயல்பாடு-01**

**படிநிலை-01-குழந்தைகளைக் குழுவாகப் பிரித்தல்**

குழந்தைகளைக் குறைந்தபட்சம் 5 பேர் அல்லது 10 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்க வேண்டும். அவ்வாறு பிரிக்கப்பட்ட பின்பு அவர்கள் பார்வையிட வேண்டிய அலுவலகம், சந்திக்க வேண்டிய ஆட்களின் தகவல்களைத் தெரிவிக்கலாம். கீழ்க்கண்ட அலுவலகத்தில் அல்லது ஆட்களிடம் அரசின் நலத் திட்டங்களைப் பற்றிய தகவல்களைக் கோரலாம்.

1. கிராம ஊராட்சி மன்ற அலுவலகம்.
2. கிராம நிர்வாக அலுவலகம்
3. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்
4. மகளிர் சுய உதவிக் குழுக்கள்
5. அரசின் சிறப்புத் திட்ட அலுவலகங்கள்
6. வேளாண்மை விரிவாக்க அலுவலகம்
7. கிராமக் கூட்டுறவு சங்கம், வங்கி

**படிநிலை-02-அலுவலர்களுடன் சந்திப்பு**

1. அரசியலமைப்புச் சட்ட உரிமைக் கல்வி மன்ற நெறியாளருடன் கலந்து பேசி நலத் திட்டங்கள் பற்றியும் அலுவலகப் பணி நடைபெறும் இடத்தையும் நேரடியாகப் பார்வையிட வாய்ப்புள்ள தேதியை உறுதி செய்ய வேண்டும்.

2. பார்வையிடச் செல்லும் அலுவலகத்திற்கு முன்கூட்டியே அனுமதி பெற கடிதம் அனுப்ப வேண்டும் அல்லது தொலைபேசி மூலம் உரிய அலுவலர்களிடம் பேசி அனுமதி பெற வேண்டும்.
3. அனுமதி பெற்ற பின்பு அவர்கள் கூறும் நேரத்தில் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டும்.
4. அலுவலர்களிடம் செல்லும் போது என்ன தகவல்கள் வேண்டும் என்ற நோக்கில் கேள்விகளை முன்கூட்டியே தயார் செய்து கொள்ள வேண்டும்.
5. அனைவரும் அரசியலமைப்புச் சட்ட உரிமைக் கல்வி மன்ற குழந்தைகள் என்ற பெயருக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும்.
6. முதலில் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். தாங்கள் யார் என்பதையும் என்ன நோக்கத்திற்கான இங்கு வந்துள்ளோம் என்பதையும் தெளிவாகக் கூற வேண்டும்.
7. அலுவலர்கள் கூறுவதைத் தெளிவாகக் குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்.
8. அலுவலகத்தில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகள், டைரிக்குறிப்புகள், கோப்புகள் போன்றவற்றைக் கேட்டுப் பெறலாம்.
9. ஆதிகபட்சம் 1 மணி நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

**படிநிலை-03-பணிகள் நடைபெறும் பகுதிகளை நேரடியாகப் பார்வையிடல்**

1. முன்கூட்டியே அனுமதி பெற்று மக்கள் நலத் திட்டங்கள் நடைபெறும் பகுதியைப் பார்வையிடச் செல்வது நல்லது. ஏனெனில் அன்றைய நாளில் பணி நடைபெறுமா? எங்கு நடைபெறும் போன்ற தகவல்களைப் பெறலாம்.
    - தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டப் பணிகள் நடைபெறும் இடங்கள்
    - மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஊரகம் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் இடங்கள்
    - பொது விநியோகத் திட்டம்-கூட்டுறவு நியாய விலைக் கடைகள்
2. பணி செய்யும் இடத்தில் பாதுகாப்பாக, முன்னேச்சரிக்கையுடன் செல்ல வேண்டும். பணிகள் நடைபெறும் இடத்தைப் பார்வையிடும் போது அனைவரும் சேர்ந்து செல்வது நல்லது.
3. நீங்கள் செல்லும் இடத்தில் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதனால் நேர மேலாண்மையைக் கடைப்பிடிப்பது மிக அவசியம்.
4. நீங்கள் செல்லும் இடங்களில் வேலை செய்பவர்களிடம் கேள்விகள் கேட்க விரும்பினால் சுருக்கமாகக் கேள்விகள் கேட்டு பதிலைப் பெறலாம்.

**செயல்பாடு-2**

***அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம், திருநெல்வேலி***

**படிநிலை-1 அறிக்கைத் தயார் செய்தலும் பகிர்தலும்**

- இடங்களைப் பார்வையிட்ட பிறகு அங்கு எடுத்தக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைத் தயார் செய்ய வேண்டும்.
- தயார் செய்த அறிக்கையை மன்றக் கூட்டத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- கூட்டத்தில் பகிர்ந்த பிறகு மன்ற உறுப்பினர்கள் அனைவரும் விவாதம் நடத்த வேண்டும்.

## 4. உங்கள் பார்வைக்குச் சில திட்டங்கள்

### 4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்

2005ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு சட்டம் இயற்றப்பட்டது. அதன் அடிப்படையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**இதன் அடிப்படை நோக்கம்**

1. கிராமப்புற ஏழை மக்கள் தாம் வாழும் பகுதியில் வாழ்வாதாரம் ஏதுமின்றி வேறு பகுதிகளுக்கு / நகரங்களுக்கு இடம்பெயர்தலைக் குறைக்க.
2. உடல் உழைப்பை மட்டும் மூலதனமாகக் கொண்ட குறிப்பிட்ட திறனில்லா தொழிலாளிகளுக்கு நூறு நாட்கள் வேலை வாய்ப்பை வழங்கல்

**பணிகள்**

1. புதிய குளங்கள், குட்டைகள் வெட்டுவது
2. ஏரிகள், குளங்களை தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல்
3. கால்வாய்களைச் சீர்படுத்துதல், புதிய கால்வாய் வெட்டுதல்
4. வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
5. காடு வளர்ப்பு, மரம் வளர்ப்பு
6. இயந்திரம் இல்லாமல் புதிய சாலைகளைப் போடுதல், பராமரித்தல்
7. இந்தப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குத் தமிழகத்தில் ஒரு நாளைக்கு ரூ.100 வீதம் ஊதியம் அளிக்கப்படுகிறது.
8. பெரும்பாலான பணிகள் கிராம ஊராட்சியின் வழியாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது.

9. அதே கிராமத்தில் வசிக்கும் 18 வயது பூர்த்தியடைந்தவர்களே இத்திட்டத்தில் சேர தகுதியுடையவர்கள்.
10. பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். 3 இல் ஒரு பாகம் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும்.
11. மாற்றுத் திறனாளிகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.
12. விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்க வேண்டும். உடனடியாக வேலையும் வழங்க வேண்டும்.
13. வேலை வழங்கவில்லையெனில் சட்டப்படி வேலையின்மைக்கான படியை நாள்தோறும் வழங்க வேண்டும்.
14. பணிகள் 5 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
15. ஒப்பந்தக்காரர்களையோ, இயந்திரங்களையோ பயன்படுத்தக் கூடாது.

### 4.2. முழு சுகாதாரத் திட்டம்

கிராம சுகாதாரத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை ஒழித்துக் கிராம சுகாதாரத்தை மேம்படுத்துதல். அனைத்து குடியிருப்புகளுக்கும் போதிய நீர், கழிப்பறை வசதிகள் ஏற்படுத்துதல், தன்சுத்தம், சுகாதாரத்தைப் பேணுவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது.

**பணித் தளங்கள்**

1. அனைத்துக் கழிப்பறை இல்லா குடியிருப்புகள்
2. பள்ளிகள், அங்கன்வாடிகள்
3. பொது இடங்கள்
4. திறந்த வெளியில் மலம் கழிப்பறைத் தடுத்தல். இதன் மூலம் நீர், உணவு அசுத்தம் அடைந்து நோய் பரவுவது தடுக்கப்படும்.
5. கழிப்பறைகளையும், கிராம சுகாதாரத்தையும் பேண புதிய யுத்திகள், தொழில் நுட்பங்களைப் பயன்படுத்ததல்.
6. உலர் கழிப்பறைகளை அகற்றுதல்
7. கையால் மலம் அள்ளுவதை அறவே ஒழித்தல்

## 4.3. புது வாழ்வுத் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் திட்டமாகும். இதற்கு முன்பு இது வாழ்ந்து காட்டுவோம் என்ற பெயரில் இருந்தது தற்போது புது வாழ்வுத் திட்டம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏழைகளுள் மிகவும் ஏழைகளின் வாழ்வு முன்னேற்றம் பெற சமுதாயங்களை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களைக் கட்டமைத்து அதற்கான பணிகள் கொண்டு செல்லப்படுகின்றன. குறிப்பாகப் பெண்களின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதுடன் வளர்ச்சிப் பணியிலும் பெண்களைப் பங்கு பெற வைத்தல்.

1. சமூக அடிப்படையிலான அமைப்புகளிடம் முடிவெடுக்கும் ஆற்றலை ஊக்குவிப்பது.
2. ஏழைகளுள் மிகவும் ஏழைகளுக்கு முன்னுரிமை அளிப்பது. குறிப்பாகப் பெண்கள், மாற்றுத் திறனாளிகள்.
3. கிராம ஊராட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளுதல்
4. வாழ்வாதாரம் சார்ந்த பயிற்சிகள், தொழிலில் ஈடுபட வைத்தல்.
5. அனைத்துக் கிராமங்களிலும் கிராமப்புற வறுமை ஒழிப்புச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டும்.
6. சமூகத் தணிக்கைக் குழு, சுய உதவிக் குழு, சமுதாய வாழ்வாதாரக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவற்றை ஏற்படுத்துவது.
7. வறுமை பற்றியும் வறுமை ஒழிப்பு திட்டம் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது.
8. சிறிய அளவிலான நிதியுதவிகள், வேலைவாய்ப்புக்கு ஏற்ற பயிற்சிகள், உள்ளூரிலேயே வாழ்வாதாரத்திற்கான வேலைகள் போன்றவற்றை உருவாக்குவது.

## 4.4. பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டம்

இந்திரா அவாஸ் யோஜனா என்ற இந்திரா நினைவு தொகுப்பு வீடு திட்டம் 1996ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், பட்டியல் சாதி அல்லாத பிற வகுப்பினரில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டமாகும். அனைவர்க்கும் வீடு என்ற நோக்குடன் இன்று பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## 4.5. நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகள் செய்யப்படுகின்றன. அவருடைய தொகுதியில் மட்டும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலவை உறுப்பினர் என்றால் மேலும் சில தொகுதிகளிலும் செயல்படுத்தலாம்.

**இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள்**

1. குடிநீர் வசதி
2. பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள்
3. பொதுச் சுகாதாரம், மருத்துவம்
4. சாலை வசதிகள்
5. பதினைந்து விழுக்காடு நிதி பட்டியல் பிரிவினர்க்கான திட்டங்களுக்கு ஒதுக்கப்படும். 75 விழுக்காடு நிதி பழங்குடியினர்க்கு ஒதுக்கப்படும்.
6. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் செய்ய ஒதுக்கலாம்.
7. பசுமை வீடுகள் திட்டம்
8. தமிழக அரசால் நடைமுறைப்படுத்தும் திட்டமாகும். கிராமப்புறத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கான திட்டமாகும். சுற்றுச்சூழலுக்குக் கேடு ஏற்படாத வகையில் சூரிய சக்தி மூலம் விளக்கு எரிக்க இத்துடன் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.
8. மேலும் சில திட்டங்கள் உள்ளன. அவை
    1. பிரதம மந்திரி கிராம சதக் யோஜனா
    2. கிராமப்புறச் சாலை மேம்பாட்டிற்கான திட்டம்
    3. தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டுத் திட்டம். (மகளிர் திட்டம்)
    4. வயது வந்த பெண்களுக்கான வாழ்க்கைத் திறன் இத்துடன் தொழில் பயிற்சிகள்.

# வாண்டுகள் பயணம் - 8

# நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஓர் அறிமுகம்

# 8. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் ஓர் அறிமுகம்

**நோக்கங்கள்**

1) உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு, பணிகள் குறித்து தெரிந்து கொள்ளல்.
2) நமது பகுதியில் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக செயல்படுத்தப்படும் மேம்பாட்டுத் திட்டங்களை கள அனுபவம் மூலம் அறிந்து கொள்ளல்
3) கிராமங்களின், நகரங்களின் முழுமையான வளர்ச்சிக்கு உள்ளாட்சி மன்றங்களின் பங்களிப்பு மிக அவசியம் என்ற புரிதலை உருவாக்குதல்.

## 1. அறிமுகம்

முதல் பாடத்தில் நம்ம ஊரைச் சுற்றிப் பார்த்த கள அனுபவம் தொடங்கி ஒவ்வொரு பாடமாக தனித்தனி தலைப்புகளில் புதிய புதிய விசயங்களை தெரிந்து கொண்டோம். இதுவரையிலும் நம்ம ஊரையே நாம் பார்க்காத ஒரு கோணத்தில் பார்த்து நிறைய படிப்பினைகளை புதிதாக கற்றுக்கொண்டோம். நமது நலவாழ்வு தொடர்பாக குழந்தைகளின் கல்வி தொடர்பாக நம் ஊரின் சுத்தம் மற்றும் சுகாதாரம் தொடர்பாக எவ்வளவு விசயங்களைக் கற்றுக் கொண்டோம். இதுமட்டுமா நம்ம ஊரில் பாலின சமத்துவம் எல்லா மட்டங்களிலும் பெண்களின் பங்கேற்பு எப்படி உள்ளது என்பதை தெரிந்து கொண்டோமில்லையா! அதோடு கூட நம்ம உள்ளாட்சி மன்றங்கள் எப்படி இயங்குகின்றன ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான அதிகாரங்கள் என்னென்ன என்பதை எல்லாம் விரிவாகப் பார்த்தோம். நம்ம பகுதியின் முன்னேற்றத்திற்கு என்னென்ன திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்படுகின்றன என்று நன்கு தெரிந்து கொண்டோம். இந்தப் பின்னணியில் இப்போது புதிதாக ஒரு பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம். அதுதான் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்.

## 2. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் என்றால் என்ன?

உலகில் உள்ள அனைத்து நாடுகளும் ஐக்கிய நாடுகள் அவையின் உறுப்பினர்களாக உள்ளன. இந்த ஐக்கிய நாடுகள் அவை உலகில் அமைதி நிலவுவதும் அனைத்து நாடுகளுக்கு இடையே வளங்களைப் பரிமாறிக் கொள்ளவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் பல்வேறு வகையான ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றி வருகிறது. ஒட்டுமொத்த உலகின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களையும் முன்னெடுப்புகளையும் அவ்வப்போது ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றி வருகின்றன. அந்த வகையில் வறுமையில்லாத, சுரண்டல் இல்லாத, சுகாதாரமான, ஏற்றத்தாழ்வுகள் இல்லாத ஒரு உலகை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில்

இரண்டாயிரம் ஆண்டில் "புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகள்" என்ற திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை அறிமுகப்படுத்தியது. ஆனால் எதிர்பார்த்த அளவு இந்த இலக்குகளை உலக நாடுகளால் எட்ட முடியவில்லை. இதற்கு பல காரணங்கள் இருந்தன. எனவே 2015 ஆம் ஆண்டு இதே கனவுகளை நனவாக்கும் முயற்சியில் "நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்" என்ற தலைப்பில் 17 இலக்குகளையும் அதை நிறைவேற்றுவதற்கான குறிக்கோள்களையும் முன்வைத்துள்ளது. இவற்றை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. தங்களது நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் இக்குறிக்கோள்களை இணைத்து அவற்றை செயல்திட்டங்களாக வடிவமைத்து கொண்டு செல்வதாக அனைத்து நாடுகளும் ஒத்துக் கொண்டுள்ளன. இதனடிப்படையில் இந்திய அரசும் மேற்ச்சொன்ன 17 இலக்குகளையும் தனது அனைத்து செயல்திட்டங்களிலும் இணைத்துக்கொண்டு அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் பாடுபடுவதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

## 3. நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகள்

ஐக்கிய நாடுகள் சபை 2015 ஆம் ஆண்டு வெளியிட்டு அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்ட நீடித்த வளர்ச்சிக்கான 17 இலக்குகள் பின்வருமாறு.

இலக்கு 1: வறுமையை ஒழித்தல்

இலக்கு 2: பட்டினியை ஒழித்தலும் உணவுப் பாதுகாப்பும்

இலக்கு 3: அனைவர்க்குமான நலவாழ்வை உறுதிசெய்தல்

இலக்கு 4: தரமான சமமான கல்வியை உறுதிசெய்தல்

இலக்கு 5: பாலின சமத்துவத்தை உறுதிசெய்தல் (அனைத்துப் பெண்களுக்கும் அதிகாரமளித்தல்)

இலக்கு 6: சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத்தை உறுதிசெய்தல்

இலக்கு 7: அனைவர்க்கும் மலிவான தூய்மையான எரிசக்தி கிடைக்கச் செய்தல்

இலக்கு 8: கண்ணியமான வேலையும் நிலைத்த பொருளாதார வளர்ச்சியும்

இலக்கு 9: நிலையான வளர்ச்சியை நோக்கிய உள்கட்டமைப்பு - உற்பத்தி - கண்டுபிடிப்பு

இலக்கு 10: நாடுகளுக்கிடையேயும் உள்நாட்டிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல்

இலக்கு 11: சீர்மிகு நகரங்களும் சமூகங்களும்

இலக்கு 12: பொறுப்புள்ள நுகர்வும் உற்பத்தியும்

இலக்கு 13: பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களை எதிர்கொள்வது

இலக்கு 14: கடல் சார் வளங்களின் நீடித்த வளர்ச்சி

இலக்கு 15: சுற்றுச்சூழலை காத்தல் – காடுகளை காத்து பாலைவனமாக்கலை தடுத்தல்

இலக்கு16:அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்கள் உருவாக்கல் – அனைவருக்குமான நீதி

இலக்கு 17: உலகளாவிய ஒருங்கிணைப்பும் பன்னாட்டு பங்களிப்பும்

## 4. நீடித்த வளர்ச்சிக்கான குறிக்கோள்கள்

3.1. 2030 க்குள், உலக அளவிலான தாய் மரணத்தை 100000 உயிர் பிறப்புகளுக்கு 70 ஐ விடவும் குறைத்தல்.

3.2. 2030 க்குள், பிறந்த குழந்தைகள் மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் தடுக்கக் கூடிய மரணத்தை ஒழித்தலோடு அனைத்து நாடுகளும் பிறந்த குழந்தை மரணத்தை 1000 உயிர் பிறப்புக்கு 12 ஐ விடவும் குறைத்தல் மற்றும் 5 வயதுக்கும் குறைவான குழந்தை மரணத்தை 1000 உயிர் பிறப்புக்கு 25 ஆக குறைத்தல்.

3.3. 2030 க்குள், எய்ட்ஸ், காசநோய், மலேரியா, அலட்சியப்படுத்தப்பட்டுள்ள வெப்பமண்டல நோய்களை ஒழித்தல் மற்றும் கல்லீரல் அழற்சி, நீர்வழி பரவும் நோய்கள் மற்றும் பிற பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தல்.

3.4. 2030 க்குள், தடுப்பு மற்றும் சிகிச்சையினால், பரவா நோய்களால் ஏற்படும் குறைப்பிரசவ குழந்தை மரணத்தைக் குறைத்தல் மற்றும் மன நலத்தையும் நல் வாழ்க்கையையும் ஊக்குவித்தல்.

3.5. போதை மருந்துப் பழக்கம் மற்றும் தீய குடிப்பழக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய போதைப் பொருள் பழக்கங்களைத் தடுத்தல் மற்றும் சிகிச்சை அளித்தலைப் பலப்படுத்துதல்.

3.6. 2020 க்குள் சாலை விபத்துக்களால் உலக அளவில் ஏற்படும் மரணத்தையும் காயங்களையும் பாதியாகக் குறைத்தல்.

3.7. 2030 க்குள் குடும்பக் கட்டுப்பாடு, தகவல் மற்றும் கல்வியை உள்ளடக்கிய பால்வினை மற்றும் இனப்பெருக்க நலச் சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல். தேசிய உத்திகளிலும் திட்டங்களிலும் இனப்பெருக்க சுகாதாரத்தை ஒருங்கிணைத்தல்.

3.8. பொருளாதார இழப்பு பாதுகாப்பு, தரமான முக்கிய சுகாதாரச் சேவை கிடைத்தல், பாதுகாப்பான, பலன் அளிக்கும், தரமான மற்றும் மலிவான முக்கிய மருந்துகளும் தடுப்புமருந்துகளும் அனைவருக்கும் கிடைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைவருக்குமான சுகாதாரப் பாதுகாப்பு.

3.9. 2030 க்குள், ஆபத்தான வேதிப்பொருட்கள் மற்றும் காற்று, நீர், நில மாசு மற்றும் அசுத்தத்தின் காரணமாக ஏற்படும் மரணத்தையும் நோய்களையும் கணிசமாகக் குறைத்தல்.

நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்: குறி இலக்குகள்

3.அ, அனைத்து நாடுகளுக்கும் பொருத்தமானதாக உலக சுகாதார நிறுவனத்தின் புகையிலைக் கட்டுப்பாடு மீதான கட்டமைப்பு மாநாட்டுத் தீர்மானங்களை வலிமைப்படுத்தி நடைமுறைப்படுத்துதல்.

3 ஆ, முக்கியமாக வளரும் நாடுகளைப் பாதிக்கும் பரவும் மற்றும் பரவா நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் மற்றும் மருந்துகளை ஆய்வு செய்து உருவாக்குதலை ஆதரித்தல். டிரிப்ஸ் உடன்பாடு மற்றும் பொது சுகாதாரம் பற்றிய டோகா பிரகடனத்துக்கு ஏற்ப மலிவாக முக்கிய மருந்துகளையும் தடுப்பு மருந்துகளையும் கிடைக்கச் செய்தல். இது அறிவுசார் சொத்துரிமையின் வணிகம் தொடர்பான அம்சங்கள் பற்றிய உடன் பாட்டின் ஷரத்துகளை வளரும் நாடுகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துகிறது. பொது சுகாதாரத்தைப் பாதுகாக்கும் நெளிவுசுளிவுகள் சம்பந்தப்பட்டவை இவை. குறிப்பாக அனைவர்க்கும் மருந்துகள் கிடைக்க வழிவகை செய்கிறது.

3 இ. தேசிய மற்றும் உலகளாவிய அளவில் ஆரம்பக் கட்ட எச்சரிக்கை, ஆபத்தைக் குறைத்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றில் அனைத்து நாடுகளின், குறிப்பாக வளரும் நாடுகளின் திறனை வலிமைப்படுத்துதல்.

நிலையான வளர்ச்சி இலக்குகள் 3-க்கு வெளியே தேர்வு செய்யப்பட்ட சுகாதாரம் சார்ந்த குறி இலக்குகள்

குறி இலக்கு 2.2: 2030-க்குள் அனைத்து வகையான ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் ஒழித்தல். 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் வளர்ச்சி குன்றி பலவீனமாக இருத்தலைப் போக்குதல், இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் முதியோரின் ஊட்டச்சத்து தேவைகளை நிவிர்த்தி செய்தல் ஆகிய உலக அளவில் ஒத்துக்கொண்ட குறி இலக்குகளை 2025-க்குள் எட்டுதல்.

குறி இலக்கு 6.2: 2030-க்குள்,அனைவரும் போதுமான சமத்துவ நிலையில் சுகாதாரம் மற்றும் தூய்மையான சூழலைப் பெறுதல். வெளி இடங்களில் மலங்கழித்தலை ஒழித்தல். நெருக்கடியான நிலைகளில் பெண்கள் மற்றும் சிறுமியரின் தேவைகளில் போதிய கவனம் செலுத்துதல்.

குறி இலக்கு 7.1: 2030-க்குள்,அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நவீன ஆற்றல் சேவைகள் கிடைப்பதை உறுதிசெய்தல்.

குறி இலக்கு 11.6: நகரங்களின் தீங்களிக்கும் தனிநபர் சுற்றுசூழல் பாதிப்பைக் குறைத்தல். காற்றுத் தரத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல், நகரட்சி கழிவு மேலாண்மை ஆகியவை இதில் அடங்கும்.

குறி இலக்கு 13.1: அனைத்து நாடுகளிலும் காலநிலை தொடர்பான ஆபத்துக்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளில் இருந்து மீளமைதல் மற்றும் தகவமைவுத் திறனை வலிமைப்படுத்துதல்.

குறி இலக்கு 16.1: எல்லா இடங்களிலும் அனைத்து வகையான வன்முறைகளையும் அது தொடர்பான மரண வீதங்களையும் கணிசமாகக் குறைத்தல்.

குறி இலக்கு 17.19: 2030-க்குள், மொத்த உள்நாட்டு உற்பத்தியை நிறைவுசெய்யும் படியாகவும், வளரும் நாடுகளில் புள்ளிவிவர திறன் உருவாக்கத்துக்கு துணைநிற்கும் படியாகவும், நிலையான வளர்ச்சியில் முன்னேற்றத்தின் அளவுகோல்களை உருவாக்க தற்போது இருக்கும் முன்முயற்சிகளை கட்டமைத்தல்.

# இந்திய அரசமைப்பின் முகப்புரை

## (Preamble to the Constitution of India)

இந்திய குடிமக்களாகிய நாம்
இந்தியாவை இறையாண்மை கொண்ட
சமதர்ம
சமய சார்பற்ற
சனநாயக
குடியரசாக
அமைப்பதென உறுதி பூண்டுள்ளோம்.
இதன் மூலம் இந்தியாவின் அனைத்து குடிமக்களையும்
பாதுகாப்பதுடன்

- சமூக, பொருளாதார, அரசியலில் அனைவர்க்கும் நீதி
- எண்ணியதை வெளிப்படுத்த, எடுத்துச் சொல்ல, நம்பிக்கை வைக்க, உண்மையைச் சொல்ல, வழிபாடு செய்ய சுதந்திரம்
- தகுநிலையிலும் வாய்ப்பிலும் சமத்துவம் அளித்து உயர்வுறச் செய்தல்
- தனி மனிதர்களின் மாண்பு, நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் சகோதரத்துவத்தோடு வாழ்தல்

இந்திய அரசமைப்புச் சட்டத்தை 1949ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26ஆம் நாள் நமது அரசியல் நிர்ணய அவையில் ஏற்றுக்கொண்டு, இயற்றி, நமக்கு நாமே வழங்குகிறோம்.

# அரசமைப்பு உரிமைக் கல்வித் திட்டம்


## வான்முகில்

15, கவிதா நகர், மகாராசா நகர் அஞ்சல், திருநெல்வேலி.

தொலைபேசி : 0462-2521771 மின்னஞ்சல் : creindia2021@gmail.com இணையதளம் : www.cre.org.in